

மயிலம் முருகன் கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தானிடமிருந்து மயிலம் பொம்மபுர ஆதீனம் பெற்றுக் கொண்டார். உடன் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் கோடம்பாக்கம் மண்டலம், கோவிந்தன் சாலை, வார்டு–140ல், தேசிய நகர்ப்புர சுகாதார இயக்க நிதி ரூ.1.20 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள புதிய நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, நிலைக்குழுத்தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர் எம்.ஸ்ரீதரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இன்று நடைபெறுகிறது!

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் - மாணவர் அணி நிர்வாகிகள் நேர்காணல்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், ஆக.31-

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழக மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் இன்று - (31.08.2024 - சனிக்கிழமை ) காலை 9 மணி முதல் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது

கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகள் (அரசு மற்றும் தனியார் கலைக்கல்லூரிகள் , சட்டக் கல்லூரி , பொறியியல் , மருத்துவக்கல்லூரி , பாலிடெக்னிக் மற்றும் ஐ.டி.ஐ. உள்ளிட்ட அனைத்து வகை கல்லூரி மாணவ மாணவிகள்) மற்றும் பள்ளி மாணவர்கள் மட்டுமே நேர்காணலில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்

விண்ணப்ப படிவங்களை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்களிடமும் நேர்காணல் நடைபெறும் நாளன்று விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

குறிப்பு. நேர்காணலில் கலந்து கொள்பவர்கள் கொண்டு வர வேண்டிய ஆவணங்கள் .

பாஸ்போர்ட் புகைப்படங்கள் 2

மாற்றுச் சான்றிதழ்

பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான அடையாள அட்டை.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி குறிப்பிட்டுள்ளார்.

### தாழ்த்தப்பட்ட – பிற்படுத்தப்பட்ட

# மக்களின் உரிமைக்காக தொடர்ந்து செயல்படும் முதல்வருக்கு நன்றி!

## திருப்பூர் தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருப்பூர், ஆக. 31-

திருப்பூர் வடக்கு மாவட்டம், தெற்கு மாநகரம், நல்லூர் பகுதி கழக செயற்குழு கூட்டம் காங்கேயம் சாலை, ராக்கியாபாளையம் பிரிவு, முத்தனம்பாளையம் சாலையில் அமைந்துள்ள தங்கவேல் திருமண மண்டபத்தில் பகுதி கழக அவைத் தலைவர் பி.சுப்பிரமணியம் தலைமையில் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர கழக செயலாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், நல்லூர் பகுதி கழக செயலாளர் மேங்கோ அ.பழனிசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் வடக்கு மாநகர் அவைத் தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, பகுதி கழக துணை செயலாளர்கள் சு.நாகராஜ், நா.பழனிச்சாமி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.சசிகுமார், வட்டக் கழக செயலாளர்கள் சி.பத்திரன், மு.மனோகரன், ப.வெங்கட்ராஜ், சி.ஆறுமுகம், மு.நந்த கோபால், வட்டக் கழக பொறுப்பாளர் மு.கார்த்தி, மாவட்ட பிரதிநிதி வி.பி.மகேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ஆனந்தி, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ம. அசோக்குமார், என்.எஸ்.தியாகு, மாநகர வர்த்தகர் அணி அமைப்பாளர் தளபதி சே. சுகுமார், மாவட்ட நெசவாளர்களின் முன்னாள் துணை அமைப்பாளர் தம்பி சலீம், முரசொலி உதயகுமார் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழகம் எனும் அரசியல் பேரியக்கம் 75 ஆண்டுகளாக மக்களுக்கு பணியாற்றி இந்த 2024 ஆம் ஆண்டில் தனது பவள விழா நிறைவினை கொண்டாடுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த இயக்கம் அவரின் மறைவிற்கு பின்பு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமை பொறுப்பை ஏற்றும், தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மக்களுக்கான பணியில் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொடர்ந்து செயலாற்றி வருகிறது. 75 ஆண்டு கால கழக வரலாற்றில் தமிழ்நாடு, தமிழ் மொழி, தமிழரின் உரிமை இவற்றிகாக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்ற இயக்கம் தான் தி.மு. கழகம். நாம் வாழ்கின்ற இந்த நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்து தமிழை பெருமைப்படுத்திய இயக்கம் தி.மு.க. இத்தகைய பெருமை வாய்ந்த இயக்கத்தின் பவளவிழா நிறைவினை கழகம் கொண்டாடும் வகையில் வருகிற செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் தலைநகர் சென்னையில் எழுச்சி மிகுந்த விழாவாக கொண்டாடப்பட இருக்கிறது. இந்த பவளவிழா நிகழ்வில் நம்முடைய பகுதியிலிருந்து அனைவரும் திரளாக பங்கேற்பது என கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துச் செல்கின்ற வகையில் நல்லூர் பகுதி முழுவதும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழாகவே வாழ்ந்த தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட 100 ரூபாய் நாணயத்தில் கலைஞர் அவர்களின் உருவத்துடன் அவர் கையெழுத்திலான "தமிழ் வெல்லும்" என்கிற சொற்களும் இடம் பெற்றுள்ளன. தலைவர் கலைஞரின் புகழுக்கு மற்றொரு மணிமகுடமாக, வைரமாக அவரது உருவம் பொறித்த நாணயத்தை வெளியிட்ட ஒன்றிய அரசுக்கு இந்த கூட்டம் என நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நாணயம் வெளியிடப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்து, கலைஞருக்கு புகழ் சேர்த்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

கடந்த 2009ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமானது பல்வேறு காரணங்களால், பல்வேறு வழக்குகளால் அருந்ததிய மக்களுக்கு கிடைக்க வேண்டிய நீதி காலதாமதம் ஆகிக் கொண்டே இருந்தது. மேற்கண்ட தடைகளை எல்லாம் அரசியல் தளத்திலும், நீதி மன்றத்திலும் உரிய முறையில் வாதங்களை எடுத்து வைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட உள் ஒதுக்கீடு சட்டம் செல்லுமன தற்போது கடந்த ஆகஸ்ட் மாதம் 08ம் தேதி உச்சநீதிமன்றம் தீர்ப்பை தந்துள்ளது. இத்தகைய வரலாற்று சிறப்பு வாய்ந்த தீர்ப்பை பெறுவதற்கு உறுதுணையாக கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு அருந்ததியின மக்களின் சார்பிலும், சமூகத்தை சேர்ந்த அமைப்புகள் இயக்கங்கள் மற்றும் சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகளும் நன்றியினை தெரிவித்துள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து செயலாற்றி வருகிற நம்முடைய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு 3 சதவீத உள் ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்கிற தீர்ப்பை பெற்று தந்ததற்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

வறுமை இல்லாத சமத்துவம் வாய்ந்த ஒரு அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை நாம் வருங்காலத்தில் உருவாக்கவும், உலக அளவில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்கவும், மாணவர்கள் கல்வி கற்க எதுவும் தடையாக இருக்கக்கூடாது என்றும், அவ்வாறு தடைகள் ஏற்பட்டால் அதை உடைத்தெறிந்து மாணவச் சமுதாயம் வெற்றி பெற அனைத்து உதவிகளையும் திராவிட மாடல் அரசு மேற்கொள்ளும் என சூளுரைத்து மாணவிகள் போல் மாணவர்களுக்கும் மாதம் ரூபாய் 1,000 ஊக்கத் தொகை வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம் 3.28 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் கொங்கு மண்டலமான கோவையில் கடந்த மாதம் 9ம் தேதி கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்ததன் மூலம் மாணவர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த தளபதி அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



தருமபுரி கிழக்கு மாவட்டம் பென்னாகரம் வடக்கு ஒன்றியம்,பாப்பாரப்பட்டி பேரூராட்சி பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தருமபுரி எம்.பி.ஆ.மணி, முன்னாள் மாவட்ட செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி, மாவட்ட துணை செயலாளர் ரேணுகாதேவி, ஒன்றிய அவைத்தலைவர் சரவணன்,பென்னாகரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சபரிநாதன், பாப்பாரப்பட்டி பேரூர் கழக செயலாளர் சண்முகம், நல்லம்பள்ளி துணை சேர்மன் பெரியண்ணன், ஐ.டிவிங் எம்.பி.கௌதம் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் – ஒன்றிய, நகர, பேரூர்களில் தெருமுனைக் கூட்டங்கள் மூலம்

# தி.மு.க.வின் சாதனைகளை மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வேண்டுகோள்!



நாமக்கல், ஆக. 31 -

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான மோகனூர் சாலையில் உள்ள முல்லை நகர், கலைஞர் அறிவாலயம் இனமானப் பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராம லிங்கம் சேந்தமங்கலம் கே. பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார்.

கூட்டத்தில் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் சார்பு அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் நகராட்சியை, மாநகராட்சியாக தரம் உயர்த்தியமைக்கு கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு க ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளரும் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும் வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் அவர்களுக்கும் மற்றும் நாமக்கல் மாவட்டத்தினை மாநகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு முயற்சிகளையும் மேற்கொண்ட நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அவர்களுக்கும், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி ஆகியோருக்கும் இக்கூட்டத்தின் மூலம் நன்றியினை தெரிவித்து கொளவது,

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள படித்த ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆணை வழங்கிய கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு க ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளரும் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து கொள்வது,

நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகரம், பேரூர்களில் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி, மக்களிடம் தி.மு.க.வின் சாதனைகளை எடுத்துக் கூறும் நிகழ்வுகளுடன், கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ணக் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திடவும், ஒவ்வொரு ஊரிலும் உள்ள நம் கொள்கைத் தலைவர்களான தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது சிலைகளைப் பொலிவுபடுத்தி, மாலையிட்டு மரியாதை செலுத்துவதுடன், நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கொடிக் கம்பங்களின் விவரங்களை நகரஒன்றியபேரூர் கழகச் செயலாளர்கள் வழியாகச் சேகரித்து, நகரம்ஒன்றியம் பேரூர் வாரியாக கழகக் கொடிக்கம்பங்களின் எண்ணிக்கை, கொடிக்கம்பம் உள்ள ஊர் இடம், புதுப்பிக்கத் தேவையுள்ள கொடிகளின் எண்ணிக்கை, கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள கொடிக்கம்பங்களின் விவரங்களை நகரம்ஒன்றியம் பேரூர் வாரியாக ஆகஸ்ட் 31 ஆம் தேதிக்குள் மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும்,

கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு க ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 16.08.2024 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகின்ற 10ஆம் தேதிக்குள் நடத்தப்படுவதற்கான அட்டவணையினை மாவட்ட அலுவலகத்தில் ஒப்படைக்கபட வேண்டும் என இக்கூட்டத்தின் மூலம்தீர்மானிக்கப்படுகிறது.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் கல்லூரியில் பயிலும் 240 கிளை செயலாளர் மற்றும் பிரதிநிதிகளின் வாரிசுகளுக்கு கல்வி உதவி தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதனை விரிவாக்கும் பொருட்டு அனைத்து BLA 2, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழகம், வார்டு கழகத்தில் தற்போது பொறுப்பில் உள்ள அவைத்தலைவர், துணை செயலாளர், பொருளாளர், ஒன்றிய, நகர, பேரூர் அணியின் அமைப்பாளர், துணை அமைப்பாளர், தலைவர் மற்றும் தொடர்ந்து கழகத்தில் மூன்று உறுப்பினர் அட்டைக்கு குறையாமல் உள்ளவர்களுக்கு தலைவர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளரிடம் வழங்கப்பட உள்ளது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்திற்கு,தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு கருத்துகளை முன்வைத்து நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்ட, ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். சேகர்

### ஆகஸ்ட் 31 (2020)



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, நகர இளைஞர் அணி அமைப்பாளர், மூன்று முறை குமாரபாளையம் நகரச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

குமாரபாளையம் நகர்மன்ற உறுப்பினராக இரண்டு முறையும், 2006ல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.